DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 14/2024 Crime No. 160/2023 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW6- கணேசன் | Village | |
| Father Name | குப்புசாமி | Taluk | |
| Age | 50 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 13.08.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் அத்தானியில் குடியிருந்து கொண்டு, டெய்லராக உள்ளேன். சுமார் 1 ஆண்டுக்கு முன்பு விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் வந்து பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் இட்டேன்.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 14/2024 Crime No. 160/2023 Station Appakodal

| Name | PW-2/LW2- ராஜேந்திரன் | Village | |
|---|---|---|---|
| Father Name | லட்சுமணன் | Taluk | |
| Age | 41 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 13.08.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் அத்தானியில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்தபோது விபத்து ஏற்பட்டிருந்தது.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், கு.வி.மு.ச.161 வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து சங்கதிகளையும் மறைத்து தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 14/2024 Crime No. 160/2023 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW1- ஜீவ பாலன் | Village | |
| Father Name | மணி | Taluk | |
| Age | 20 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 13.08.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் வெள்ளித்திருப்பூரில் குடியிருந்து கொண்டு, கல்லூரியில் படித்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன மணி என் அப்பா ஆவார். கடந்த 21.10.2023 ம் தேதியன்று, மதியம் சுமார் 02.15 மணியளவில், எனது அப்பா அவரது இருசக்கர வாகனத்தில் சக்தி-பவானி மெயின் ரோட்டில், அத்தானி, செம்புளிச்சாம்பாளையம் பிரிவு அருகில் உள்ள ஸ்ரீ சக்தி ஹாலோ பிரிக்ஸ் கம்பெனி அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது அதே ரோட்டில், அதே திசையில் அவருக்கு பின்னால் வந்த ஈச்சர் வாகனம் மோதி எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், அருகில் இருந்தவர்கள் எனது அப்பாவை அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தகவல் கிடைத்து அங்கு சென்றேன். மேற்படி மருத்துவமனையில் எனது அப்பாவை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் நான் ஆப்பக்கூடல் காவல் நிலையம் சென்று மேற்படி விபத்து தொடர்பாக புகார் அளித்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மறுநாள் அந்தியூர் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற எனது அப்பாவின் பிரேதத்தின் மீது நடந்த பிரேத விசாரணையின்போது உடனிருந்து எனது அப்பாவின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**